# கிருபையுள்ள வார்த்தை ®

## KIRUBAIYULLA VAARTHAI

லூக்கா (LUKE) 4:22

**Vol - 17** | **October அக்டோபர்** | **2016**

ஆண்டு சந்தா ரூ. 120/- தனிப் பிரதி ரூ. 10/- வெளிநாட்டு சந்தா ரூ. 600/-

## திருமுழுக்கு : தேவனுடைய தெய்வீக திட்டம்



ஆந்திர மாநிலத்தில் ஆத்தும ஆதாய பயிற்சி முடித்த J.C. ஆத்தும ஆதாய பயிற்சிப் பள்ளி மாணவர்கள்

J.C. School of Evangelism - 9th Graduation Ceremony

கௌரவ ஆசிரியர் BETTY CHOATE ஆசிரியர் பிலேமோன் ராஜா

புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

## இதழின் உள்ளே...


ஒரே ஞானஸ்நானம் 3

திருமுழுக்கின் என்ன? 6

தொழுகை (ஜெபம்) 8

வெளிப்படுத்தின விசேஷம்... 9

ஞானஸ்நானத்தின்... 11


*In memory of J.C. CHOATE*


*Guest Editors :* **Betty Choate, Jerry & Paula Bates**

*Editor :* **PHILEMON RAJAH**

ஆசிரியர் குழு

**V. கிங்ஸ்லிராஜா,** M.S. (I.T.& M.)., M.Th.,

**Dr. V.S. இம்மானுவேல்,** M.Sc., D.D.,

**C. கியாமிலஸ் கார்த்திக்,** B.Sc.,

**R. ஆண்டனி ராஜா,** D.Th.,


## கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

வாசகர்கள் கவனத்திற்கு...

**தமிழன் T.V. யில்**

ஞாயிறு காலை 6-45 மணி

**நம்பிக்கை T.V. யில்**

வெள்ளி காலை 6-15 மணி

கிருபையுள்ள வார்த்தை நிகழ்ச்சியினை காணத்தவறாதீர்.


செய்தியாளர்கள்:

போதகர். **பிலேமோன்ராஜா,** M.A., M.Th.,
(Director - J.C. School of Evangelism)

சகோ. **கிங்ஸ்லி ராஜா,** M.Th.,
(இணை ஆசிரியர் – கிருபையுள்ள வார்த்தை)










Advanced Bible Correspondence Courses Available in English.

For Details:
CHOATE BIBLE CORRESPONDENCE COURSE INSTITUTE
P.O.Box 15, Arasaradi,
Madurai - 625 016. Tamilnadu

**கிருபையுள்ள வார்த்தை**

**பாவமன்னிப்பு பெற பறைசாற்றும் பரிசுத்தரின் வார்த்தை**

World Literature Publication
Post Box No. 15, Arasaradi, Madurai 625 016. India




Send Postal Expenses only and receive The Voice of Truth Intl. Vol.88

ஆசிரியர் உரை ...

# ஒரே ஞானஸ்நானம்



P.C. பிலேமோன் ராஜா

அன்பார்ந்த கிருபையுள்ள வார்த்தை வாசகர்கள் அனைவருக்கும், ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் எனது வாழ்த்துக்கள் மற்றும் ஜெபங்கள்!

வேதாகமம், திருமுழுக்கு (ஞானஸ்நானம்) பற்றி போதிக்கிறது. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து, இரட்சிக்கப்பட திருமுழுக்கு பெற வேண்டும் என கட்டளையிட்டார் **(மத் 28:18–20: மாற் 16:16).**



ஆயினும் திருமுழுக்குப் பெறுவதைப் பற்றி, கிறிஸ்தவ மார்க்க வட்டாரத்தில், நூதனமான உபதேசங்கள் போதிக்கப்படுகின்றன. இதனைப்பற்றி சத்தியத்தை வேதாகமத்தின் வெளிச்சத்திலே இந்த மாதம் அறிவோம்.

**எபே 2:14–16** " எப்படியெனில், அவரே நம்முடைய சமாதான காரணராகி, இருதிறத்தாரையும் ஒன்றாக்கி, பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து, சட்ட திட்டங்களாகிய நியாயப் பிரமாணத்தைத் தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து, இருதிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து, அப்படிச் சமாதானம் பண்ணி, பகையைச் சிலுவையினால் கொன்று, அதினாலே இருதிறத்தாரையும் ஒரே சரீரமாக தேவனுக்கு ஒப்புரவாக்கினார்."

பவுல், எபேசியர் புத்தகத்தின்படி, தேவனோடு ஒப்புரவாக்கப்பட்டவர்கள் எல்லாரும் ஒரே சரீரத்தில் (ஒரே சபையில்) ஒப்புரவாக்கப்பட்டோம், என்று வலியுறுத்துகிறார். யூதராயினும் புறஜாதியராயினும், இரட்சிக்கப்பட (பாவமன்னிப்பு பெற) ஒரேவழி ஞானஸ்நானம்தான் என்று அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் சொல்லப்படுகிறது **(அப் 2:38, மாற் 16:16)**

ஏனெனில் கிறிஸ்து, யூதர் மற்றும் புறவினத்தார் நடுவிலிருந்த பிரிவினையாகிய நடுச்சுவரை தகர்த்து, எல்லோரையும் தேவனோடு ஒரே சரீரத்தில் (சபையில்) ஒப்புரவாக்கினார் **(எபே 2:16).**

பழைய ஏற்பாடும், அதன் பாரம்பரியமும், பழக்க வழக்கங்களும், பத்து கட்டளைகளும், சட்டங்களும், வாழ்க்கை முறைகளும் மற்றும் மதங்களும் கிறிஸ்துவினால் உடைத்தெறியப்பட்டது **(எபே 2:14, 15).**

ஆவியின் ஒருமைப்பாட்டினால் வரும், சமாதானத்தினால் எல்லோரும் ஒரே சரீரமாக கட்டப்படுகிறோம் **(எபே 2:17–22).**

### ஒப்பனையான விவரிப்பு

**மத் 20:22ல்,** தாம் படப்போகிற பாடுகளை குறித்து இயேசு பேசுகையில், அதை 'ஸ்நானம்' என்று கூறுகிறார். அதாவது இயேசு பாடுகளில் மூழ்கிப் போகப் போவதாகப் பேசுகிறார் (ஞானஸ்நானம் என்றால் மூழ்குதல் ஆகும்).

**I கொரி 10:2** " எல்லாரும் மோசேக்குள்ளாக மேகத்தினாலும் சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள்". எகிப்தை விட்டு புறப்பட்ட இஸ்ரவேலர் அனைவரும் மோசேக்குள்ளாக, மேகத்தினாலும் செங்கடலினாலும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள் என வாசிக்கிறோம்.



இஸ்ரவேலர்கள் செங்கடல் வழியே வந்தபிறகு, எகிப்திய அடிமைதனத்திலிருந்து

விடுதலை அடைந்தது போல, நாமும் திருமுழுக்கிற்கு பிறகே பாவத்திலிருந்து விடுதலையாகிறோம் **(அப். 22:16).**

**மத் 3:10-12ல்** அக்கினி திருமுழுக்குத் தருவார் என்றால், அவியாத அக்கினியில் (நெருப்பில்) போட்டுவிடுவார் என்று அர்த்தம். ஆகவே ஒரே ஞானஸ்நானம் என்பது அக்கினி திருமுழுக்கு அல்ல.

### அது, யோவான் ஸ்நானகனின் திருமுழுக்கு அல்ல

ஒரே ஞானஸ்நானம் என்பது, யோவான் கொடுத்த மனந்திரும்புதலுக்கு ஏற்ற திருமுழுக்கும் அல்ல. **மாற் 1:4** "யோவான் வனாந்திரத்தின் ஞானஸ்நானங்கொடுத்து, பாவமன்னிப்புக் கென்று மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானத்தைக் குறித்து பிரசங்கம் பண்ணிக் கொண்டிருந்தான்."

ஏனெனில், இந்த திருமுழுக்கு யூதர் (இஸ்ரவேலர்) அல்லாத புறவின மக்களுக்கு அல்ல. யோவான் ஸ்நானகனின் நோக்கம், இஸ்ரவேலரை மேசியாவின் வருகைக்கு ஆயத்தப்படுத்துவது **(மாற் 1:2,3).**



யோவான் மரித்துப் போய் விட்டார்; அவரின் ஊழியமும் முடிந்துவிட்டது **(யோ 3:27-30).**

இயேசுவின் பிரதான கட்டளை **(மத் 28:18-20)** கொடுக்கப்படும் முன்னே, யோவான் மரித்துப் போய்விட்டார். ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே திருமுழுக்குப் பெறுவதே சரியானது. **அப் 19:1-5**ன் படி யோவான், இயேசுகிறிஸ்துவின் நாமத்தை (அதிகாரத்தை) பயன்படுத்துவதே இல்லை. இந்த திருமுழுக்கு பெற்றவர்கள், மீண்டும் (சரியான) திருமுழுக்குப் பெற கட்டளையிடப்பட்டனர். அதாவது அவர்கள் 2வது முறையல்ல, சரியான முறையில் எடுத்தனர்.

நான் எத்தனை முறை திருமுழுக்கு எடுக்கவேண்டும்? என்று சிலர் கேட்கின்றனர். **அப் 19ல்** நமக்கு சொல்லும் உதாரணம் என்னவெனில், சரியான திருமுழுக்கே முதல் திருமுழுக்காகும். அது ஒரே திருமுழுக்காகும். **எபே 4:5** "ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும் ஒரே ஞானஸ்நானமும்",

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து யோவானிடம் திருமுழுக்குப் பெற்றார். அவர் பெற்றதற்கான நோக்கம், "தேவ நீதியை நிறைவேற்றவே" **(மத் 3:13-15).** பெற்றார். அது ஒப்பிடப்பட முடியாத வேறுபாடு உள்ளது.

### பரிசுத்த ஆவியின் திருமுழுக்கு அல்ல

ஒரே திருமுழுக்கு என்பது பரிசுத்த ஆவியின் திருமுழுக்கும் அல்ல. **மத் 3:11**ல் யோவான், ஆண்டவர். இயேசுகிறிஸ்து 'பரிசுத்த ஆவியினாலும் உங்களுக்கு திருமுழுக்கு கொடுப்பார்' என்று சொன்னார்.

அநேகர் இந்த வசனத்தை சரியாக புரிந்துக்கொள்வதில்லை. பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கு அனைவருக்கும் தான், என்று போதிக்கின்றனர் மற்றும் நம்புகின்றனர். யோவான் 11ல் இரண்டு திருமுழுக்கை பற்றி யோவான் பேசுகிறார். ஆனால் இயேசுகிறிஸ்து, "தண்ணீர் திருமுழுக்கை" பற்றி மட்டுமே பிரதான கட்டளை கொடுத்துள்ளார், என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

இல்லையெனில் ஒரே திருமுழுக்கு என்ற, பைபிள் மற்றும் பரிசுத்த ஆவியானவரின் உபதேசத்தை நாமே மீறுவது போலாகும். மேலும் யோவான் கூறியதின் நோக்கம், இயேசுகிறிஸ்து தன்னைவிட உச்சமானவர்



(Supreme) என்பதேயன்றி, திருமுழுக்கை எப்படி என்று விளக்குவது அல்ல. குறிப்பாய், பரிசுத்த ஆவியின் திருமுழுக்கு என்பது யாருக்கு வாக்குத்தம் பண்ணப்பட்டது என்று கூறுவதற்கும் அல்ல. ஆனால் இயேசு கிறிஸ்து தன்னுடைய சொந்த வார்த்தைகளினாலேயே, இந்தக் குறிபிட்ட வாக்குத்தத்தத்தை கூறியுள்ளார் (அப் 5 : 1–5) இது அப்போஸ்தலர்களுக்கு மட்டும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டது.

ஆண்டவர் இயேசுகிறிஸ்து வாக்குத்தத்தம் செய்து, வெகுநாட்கள் கழித்து அல்ல, மாறாக விரைவிலேயே அது நிறைவேறியது (அப் 2:1–5). இதை போன்றே கொர்நெலியு வீட்டாருக்கும் நடந்தது (அப் 10 :44). இது யூதர்களும் புறவினத்தாரும் சரிசமமாக தேவனால் நடத்தப்பட்டதை இந்நிகழ்ச்சி காட்டுகிறது (அப் 11 :15–17: 15:8) இந்த நிகழ்ச்சி தவிர பரிசுத்த ஆவியின் திருமுழுக்கு இப்படி பெறப்பட்டதாக, எங்குமே புதிய ஏற்பாட்டில் சொல்லப்படவில்லை

## ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் [அதிகாரத்தில்]

தண்ணீர் திருமுழுக்கு என்பது கிறிஸ்தவர்களாக மாறும் (மனந்திரும்பும்) எல்லாருக்கும் பொதுவானது. இந்தக்கட்டளை ஆண்டவர் இயேசுகிறிஸ்துவினால் கட்டளையிடப்பட்டது. அது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் அதிகாரத்தின்படி பெறவேண்டிய ஒன்றாகும் (மத்28:19: லூக் 24:47: மாற் 16:15)

இந்த தண்ணீர் திருமுழுக்கை ஒருமனிதன் பிறருக்கு கொடுப்பதாகும். ஆனால் பரிசுத்த ஆவியின் திருமுழுக்கு இயேசு கொடுப்பதாகும் (யோவான் 1 :33: லூக்கா 24:49 ; அப் 2:33)



அப். 2:38ன் படி, இயேசு கிறிஸ்துவின் நாமத்திலே அனைத்து மக்களும் திருமுழுக்கு பெற்று கிறிஸ்தவர்களாய் ஆக்கப்பட்டவர்களானோம்.

லூக் 24:47ன் படி, மனந்திரும்புதலும் பாவ மன்னிப்பும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உலகில் உள்ள அனைத்து மக்களுக்கும், எருசலேம் தொடங்கி பிரசங்கிக்கப்பட வேண்டும். இது தான் அப்2 ல் நடந்தேறியது.

கிறிஸ்து என்னும் நாமம் இல்லாமல் இரட்சிப்பு இல்லை (அப் 4:12). 'கர்த்தருடைய நாமத்தினாலே திருமுழுக்கு பெறு' என பவுலுக்கு அறிவுறுத்தப்பட்டது (அப். 22:16).

பெயர் (நாமம்) என்றால் ஒரு நபர்; அந்த நபரின் நிமித்தமாக, அவரின் அதிகாரத்தின்படியான கட்டளை அதாவது உத்தரவின்படி செய்வதாகும்.

கிறிஸ்துவின் நாமம் பயனளிக்கக்கூடிய மிகவும் அதிகாரமுடைய நாமம் ஆகும் (எபேசி 4:32).

– தொடரும்

– அன்புடன், ஆசிரியர்

**குறிப்பு :**

இந்த திருமுழுக்கை பெறாதவர்கள் உடனே பெற்றுக் கொள்ளுங்கள். வசனத்தின்படி திருமுழுக்குப் பெற்றவர்கள் திருமுழுக்கிற்குள்ளே உள்ள தெய்வீக திட்டம், ஆசீர்வாதத்தை, பிறரும் பெற்று பாவப்படியிலிருந்து விடுபட தயவுசெய்து உதவுங்கள். எனக்கு வசனம் நினைவு உள்ளது என்று வெறுமனே வசனகுறிப்பை வாசிப்பதோடு இல்லாமல், பைபிளை எடுத்து எல்லா வசனங்களையும் வாசியுங்கள்.

# திருமுழுக்கில் என்ன நடக்கின்றது

Jerry Bates



இன்றைய மத உலகில், ‘திருமுழுக்கு’ அல்லது ‘ஞானஸ்நானம்’ என்ற வார்த்தையை அதிகமாக குழப்பியுள்ளனர். கிறிஸ்தவ மத உலகில் அநேகர் இச்செயலுக்கும் நம்முடைய இரட்சிப்பிற்கும் சம்பந்தம் இல்லை என்றே நினைக்கிறன்றனர். நிறைய பேர் இதைப் பற்றி புரிந்து வைத்திருப்பது என்னவெனில், நம் உள்ளத்திலும் வாழ்விலும் நிறைவேறிய பாவமன்னிப்பை வெளிப்பிடுத்துவதற்கான அடையாளச் செயல் மட்டுமே திருமுழுக்கு என்கின்றனர். **ரோமர் 6:3–4**ஐக் காட்டிலும் அதிகமாக, இவ்வகையான மனநிலையை எதிர்க்கக் கூடிய வசனப்பகுதிகள் சில உள்ளன என நான் நம்புகின்றேன்.




‘‘கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பபட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டோம்.’’ இப்பகுதி பாவத்தைப் பற்றியே பிரதானமாகக் கூறுகின்றது. இந்த அதிகாரத்தில் ‘‘பாவம்’’ என்ற வார்த்தை சுமார் 16 முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. இங்கே பவுல், கிறிஸ்தவர்களுக்கும் பாவத்திற்கும் உள்ள உறவைக் குறித்து விளக்குகிறார். அதாவது, நம்முடைய பாவங்கள் அனைத்தும் கழுவப்பட்டன என்பதை அறிந்த நாம், அதினால் தெய்வப்பக்தியுள்ள வாழ்வு வாழ தூண்டப்பட வேண்டும் என்கிறார். இங்கே கேள்வி என்னவெனில், நம்முடைய பாவங்கள் எப்பொழுது மன்னிக்கபட்டன என்பதே!

இச்செயல் (பாவமன்னிப்பு) திருமுழுக்கிலே நடைபெறுகின்றது (அல்லது), நிகழ்கின்றது.

திருமுழுக்கு என்பது, வெறுமனே ஒரு அடையாளமோ, சடங்கோ என்பதைவிட மேலானது. அது கீழ்படியும்படியான ஒரு சரீரப்பிரகாரமான செயலைவிட மேலானது. **ரோமர் 6:2ல்,** நாம் திருமுழுக்குப் பெறும்போது பாவத்திற்கு மரிக்கின்றோம் என்கிறார். **ரோமர் 6:3ல்** நாம் இயேசு கிறிஸ்துவுக்குள்ளாகவும் அவருடைய மரணத்துக்குள்ளாகவும் திருமுழுக்கு பெறுகிறோம், என்று பவுல் கூறுகிறார். திருமுழுக்கிலே நம்முடைய பாவங்களைக் கழுவுவது இயேசு கிறிஸ்துவின் இரத்தமே என எல்லோருமே ஏற்றுக் கொள்கின்றனர். **(வெளி 1:5):** ஆனால் நாம் எவ்வாறு இயேசுவின் இரத்தத்தை தொடர்பு கொள்கிறோம்? அவருடைய இரத்தம் உண்மையில் சிலுவையில் சிந்தப்பட்டது. இயேசு மரித்தபோது, போர்சேவகர் அவருடைய விளாவிலே ஈட்டியினால் குத்தினார்; அப்பொழுது இரத்தமும் தண்ணீரும் வெளியே வந்தது **(யோ. 19:34).**

நாம் திருமுழுக்கு பெறும்போது, இயேசுவின் மரணத்திற்குள்ளாக திருமுழுக்குப் பெறுகின்றோம்; ஏனெனில் அங்கேதான் அவருடைய இரத்தம் சிந்தப்பட்டது. இப்படியாகத்தான், நம்முடைய பாவங்களை மன்னிக்கக்கூடிய இயேசுவின் இரத்தத்தை நாம் சந்திக்கின்றோம். பாவத்திற்கு மரிக்காமல், ஒருவரும் இரட்சிக்கப்பட முடியாது. கிறிஸ்துவுடன் ஒன்றுசேராமல் ஒருவரும் இரட்சிக்கப்பட முடியாது. இயேசுவின் இரத்தத்துடன் தொடர்பு கொள்ளாமல் ஒருவரும் இரட்சிக்கப்பட முடியாது. அப்போஸ்தலனாகிய பவுலின்படி இவையனைத்துமே



திருமுழுக்கின்போதே நடைபெறுகின்றது. திருமுழுக்கிற்கு பின் நாம் புதிதான ஜீவனுள்ளவர்களாக நடந்துகொள்ளும்படி எழுந்திருக்கின்றோம் எனவும் பவுல் கூறுகிறார். நம்முடைய திருமுழுக்கு எவ்வாறு கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்தெழுதலின் மறுசிருஷ்டிப்பாக உள்ளது என்று பவுல் கூறுகிறார்.




ஒரு உயிர்தெழுந்த புதிய வாழ்வை ஆரம்பிக்கவே, இயேசு தம்முடைய சரீர வாழ்வை முடிவுக்கு கொண்டுவந்தார். அதைப்போன்றே, நாம் பாவத்திற்கு மரித்தோம்; அதினால் நாம் நம்முடைய பழைய வாழ்வை முடித்து, பரிசுத்தமுள்ள புதிய வாழ்வை துவங்கியுள்ளோம். ஏதோ சிலவற்றை (பாவங்களை) நம்முடைய வாழ்விலே நாம் மாற்றவில்லை, மாறாக நாம் புதிய வாழ்வை துவங்கியுள்ளோம். நம்முடைய பழைய வாழ்வு முடிந்து, புதிய வாழ்வு ஆரம்பமாவதற்கான சரீரப் பிரகார மையமாக இப்படித்தான் திருமுழுக்கு மாறுகின்றது. “இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின”. **(2 கொரி 5:17).** விளைவாக நாம், இயேசுவிடம் அர்ப்பணிக்கப்பட்ட ஒரே சிந்தையுள்ள வாழ்வை துவங்குகின்றோம்.

திருமுழுக்கிலே என்ன நடக்கின்றது என பவுல் கூறுவதை கவனத்தில் கொள்ளுகையில், திருமுழுக்கு வெறுமனே ஒரு அடையாளம் அல்லது சடங்காச்சாரம் என்று ஒருவர் எவ்வாறு கூற முடியும்?

திருமுழுக்கு பெற நீங்கள் விரும்பினால், உங்களுக்கு உதவ நாங்கள் ஆயத்தமாக இருக்கிறோம். தொடர்புக்கு : 92 4421 4421, 92 4431 4431

குன்னூர் கிறிஸ்துவின் சபையின் ஊழியரும்,
நமது ஆசிரியரின் நீண்ட கால நண்பருமாகிய

சகோ. **M.P. சாமி** அவர்கள்

கடந்த 27-09-2016 அன்று
கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.
அவரது குடும்பத்தினரின் ஆறுதலுக்காகவும்,
திருச்சபை விசுவாசிகளுக்காவும்
ஜெபித்துக் கொள்வோம்.

## பொதுவான செய்திகள்

1. தமிழக உள்ளாட்சி தேர்தலை உயர்நீதி மன்றம் தள்ளிவைத்துள்ளது.
2. தமிழக முதலமைச்சர் உடல்நிலை பாதிக்கப்பட்டு சென்னை அப்பல்லோ மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.
3. நியூஸிலாந்து அணிக்கு எதிராக முதல் இரண்டு டெஸ்டிலும் வெற்றி பெற்ற இந்திய அணி முதலிடம் பிடித்தது.
4. பாரலிம்பிக் ஒலிம்பிக்கில் தமிழகத்தை சேர்ந்த மாரியப்பன் தங்கபதக்கம் வென்று சாதனை புரிந்தார்.
5. தமிழகம் கர்நாடகம் இடையே போக்குவரத்து தொடங்கியது.

சிறப்பு வேத பாடம் : தொழுகை

# பாடம் : 3 ஜெபம்

Jerry Bates



நாம் தேவனுக்குச் செய்யும் தொழுகையில், ஒரு முக்கியமான பகுதியாக இருப்பது ஜெபம் என்பது தெளிவு. இது குறித்து வேதாகமம் அடிக்கடி அதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. ஜெபத்தைக் குறித்துப் பேசுகிற ஒரு சில வசனங்களைக் கவனியுங்கள். “சோர்ந்து போகாமல் எப்பொழுதும் ஜெபம் பண்ண வேண்டும் என்பதைக் குறித்து அவர்களுக்கு அவர் ஒரு உவமையைச் சொன்னார்” **(லூக்கா 18:1).** நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள்; உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள்; ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருங்கள்” **(ரோமர் 12:12).** “எந்த சமயத்திலும் சகல விதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம் பண்ணி, அதன் பொருட்டு மிகுந்த மன உறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக் கொண்டிருங்கள்” **(எபேசியர் 6:18).**

## ஜெபம் என்றால் என்ன?

முதலாவதும் மிகச் சிறப்புமானது, ஜெபம் தான் தேவனிடத்தில் நாம் பேசுவதற்கான வழி. அது தேவனை நோக்கியதாக இருக்கவேண்டும். அது முழு நம்பிக்கையுடன் கூடியதாக இருக்கவேண்டும். அது உண்மையானதா அல்லது இருதயத்திலிருது வரக் கூடியதாக இருக்க வேண்டும். அது ஏதோ மந்திரம் ஓதுவது போல் சரியான வார்த்தைகளை பயன்படுத்துவது அல்ல. அது நமது நடத்தையின் குணாதிசியங்களைக் கொண்டது. **1 தெசலோனிக்கேயர் 5:17**ல், இடைவிடாமல் நாம் ஜெபிக்க வேண்டும் என்று பவுல் எழுதுகிறார். ஒரு நாளின் இருபத்திநான்கு மணிநேரமும் நமது மனதிலும் நமது உதடுகளிலும் ஜெபம் இருந்து கொண்டிருக்க வேண்டும் என்பது நிச்சயமாக இதன் பொருளல்ல. இடைவிடாமல் ஜெபித்தல் என்பதன் எளிய பொருள் தேவன் நம்முடைய மனதிலிருந்து வெகு தொலைவில் இல்லை. நம்முடைய இருதயத்திலிருந்தோ, வாழ்க்கைகளிலிருந்தோ மற்றும் மனதிலிருந்தோ வெகு தொலைவில் இல்லை, ஜெபம் எப்பொழுதும் இயல்பாக நமது வாழ்வில் இருக்க வேண்டும் எப்பொழுதுமே நாம் ஒரு சுருக்கமான ஜெபம் செய்து தேவனுடைய வழிநடத்துதலுக்கும், உதவிகளுக்குமாகக் கேட்கக் கூடும். ஆதி சபையார் ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருந்தார்கள் **(அப்போஸ்தலர் 2:42).**

ஜெபம் ஒரு மந்திர ஓதுவது போன்ற அமைப்பு அல்ல அல்லது உலகப் பொருளுக்கும் சுயநலத்துக்குமான ஒரு குறுக்கு வழியல்ல. தேவன் தமது ஜனங்களின் ஜெபத்தைக் கேட்பதாக வாக்குறுதி கொடுத்திருப்பதால் **(மத்தேயு 21:22),** அனைத்தும் அவருக்குக் கீழ்ப்பட்டவை என்பதை நாம் மனதில் கொள்ளவேண்டும். **யாக்கோபு 4:1–6**ல் தேவனிடத்தில் சில காரியங்களைக் கேட்ட சில கிறிஸ்தவர்கள் அவைகளைப் பெற்றுக்கொள்ளவில்லை. என்று யாக்கோபு குறிப்பிடுகிறார். அவர்கள் தங்கள் சுயஇச்சைகளை நிறைவேற்றிக் கொள்ள வேண்டுமென்று தகாத விதமாய் ஜெபித்ததால் அவர்களுடைய ஜெபங்கள் கேட்கப்படவில்லை என்று யாக்கோபு சுட்டிக் காட்டினார். இப்படியாக ஜெபம் என்பது தேவனிடத்திலிருந்து கிடைக்கப் பெறுகிற ஒரு காசோலையாக (Check) நாம் கருதிவிடக் கூடாது, நாம் செய்ய வேண்டியெதல்லாம் கேளுங்கள் அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்.

– தொடரும்

# தொடர் 12 சிமிர்னா சபையின் தூதனுக்கு எழுதுகிறதாவது (வெளி. 2 :8-11)

“சிமிர்னா சபையின் தூதனுக்கு நீ எழுத வேண்டியது என்னவெனில்: முந்தினவரும் பிந்தினவரும் மரித்திருந்து பிழைத்தவருமானவர் சொல்லுகிறதாவது”

சிமிர்னா ஒரு வியாபாரப் பட்டணமாக விளங்கியது. இதற்கென அங்கே ஒரு துறைமுகமும் இருந்தது. இத்துடன் வியாபார போட்டியிட்ட பட்டணமாக பெர்கமு இருந்தது. எபேசுவின் தென்மேற்குப் பகுதியில் அமைந்திருந்த இந்தப் பட்டணம், கிறிஸ்தவத்துக்கு எதிர்த்து நின்ற யூதர்களை கொண்ட ஒரு பலமான பட்டணமாகும். அமைப்பில் ஒரு சிறிய பட்டணமாக இருந்தபோதிலும், “ஆசியாவின் அழகிய பட்டணம்” என்றழைக்கப்பட்டதுடன் அங்கே புழங்கப்பட்ட நாணயத்திலும் அவ்வாறே பொறிக்கப்பட்டிருந்தது. சிலவேளைகளில் அது “பட்டணங்களின் கிரீடம்” என்றும் அழைக்கப்பட்டது.

### மதப் பின்னணி

சிமிர்னாவில் அநேக கோவில்கள் இருந்தன. ‘டைனோசைஸ்’ எனும் விக்கிரகம் அங்கு பிரசித்தி பெற்றிருந்தது. இந்த விக்கிரகத்தை வணங்க விழா கொண்டாடப்பட்டபோதெல்லாம் எல்லை மீறிய காமக்களியாட்டங்கள் இடம் பெற்றன. இந்தப்பண்டிகை, இலையுதிர் காலம் முடிந்து வசந்த காலம் வரும்போது கொண்டாடப்பட்டது. இலையுதிர் காலம் டைனோசைஸின் மரணம் மற்றும் அடக்கம் பண்ணப்படுதலையும், வசந்த காலம் அவனுடைய உயிர்த்தெழுதலையும் அடையாளப்படுத்துவதாக அக்கோவிலின் பூசாரிகள் விநோதமாகக் கற்பனை செய்து, ஜனங்களிடத்திலே பிரசித்திபடுத்தினர். இந்தப் பண்டிகையின் போது அங்கிருந்த ஆசாரியர்களுக்கு கிரீடம் சூடப்படுவது வழக்கம்.

இதற்கப்பால் ரோமா எனும் தேவதையின் கோவிலும் கி.மு.195ல் கட்டப்பட்டிருந்தது. கி.பி.26ல் இந்தப் பட்டணமும், எபேசுப் பட்டணமும் திபேரிய ராயனுக்கு ஒரு சிலை உண்டாக்கி, அதைத் தொழுது கொள்ள ரோம அரசு முயற்சித்தது.

இன்றும் துறைமுகப் பட்டணமாக, இது விளங்குகிறது. இப்பொழுது இதன் பெயர் இஸ்மூர். இதன் துணை நகரமாக துருக்கி என்றழைக்கப்படுகிறது. இங்கே சுமார் 20 இலட்சம் பேர் வசிக்கின்றனர். ஒரு காலத்தில் சந்தைவெளி இங்கே இருந்ததை புதைப் பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். துருக்கி தற்போது இஸ்லாமிய ஆதிக்கத்தில்இருந்தபோதிலும், அங்கே சிமிர்னாவுக்கு எழுதப்பட்ட இந்த நிரூபம், வெண்கலத் தகட்டில் பொறித்து வைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

### 1. அறிமுகம்

கிறிஸ்து தம்மை ‘‘முந்தினவரும் பிந்தினவரும் மரித்திருந்து பிழைத்தவருமானவர்’’ என்று அறிமுகப்படுத்துகிறார் (வச. 8) அதிகாரம் 1ல் யோவான், இயேசுவை, “மனுஷ குமாரனுக்கு ஒப்பானவராகக்” கண்டார் (1:13). அவர் குத்து விளக்குகளின் நடுவே உலாவுகிறவராகக் கண்டபோது, யோவான் அவருடைய பாதத்தில் செத்தவனைப் போல விழுந்தார். (வெளி 1:17). அவர்மேல் இயேசு தமது கரத்தை வைத்து, “பயப்படாதே, நான் முந்தினவரும் பிந்தினவரும், உயிருள்ளவருமாயிக்கிறேன் என்றும் வசனம் 18ல், “மரணத்திற்கும் பாதாளத்துக்குமுரிய திறவுகோலையுடையவராயிருக்கிறேன்’’ என்றும் சொன்னார்.

சிமிர்னாவுக்கு இந்த வார்த்தைகள் மூன்று விதங்களில் தேவையாயிருந்தது.

அ. வசனம் 1-ல் இயேசு ‘‘மரித்திருந்து பிழைத்தவராயிருக்கிறார்’’ எனும் கருத்து, சிமிர்னாவில் ‘டைனோசைஸ்’ எனும் அஞ்ஞானத் தேவனுக்கு ஆசரிக்கும் வசந்த காலப்

பண்டிகையானது அவன் இலையுதிர் காலத்தில் மரித்து அடக்கம் பண்ணப்பட்டு, வசந்த காலத்தில் இலைகள் துளிர்விடும் காட்சி அவன் உயிர்த்தெழுந்தான் என்ற ஒரு நம்பிக்கை ஆசாரியர்கள் (பூசாரிகள்) ஜனங்களிடையில் வலியுறுத்தினர். இது ஒரு விநோதமான கற்பனை. அவனல்ல, இயேசுவே மரித்திருந்து, அடக்கம் பண்ணப்பட்டு, மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து மீண்டும் மரியாதவராக என்றென்றும் பிழைத்திருக்கிறவர் என்பது சுட்டிக் காட்டப்பட்டது.

ஆ. வசனம் 9ல் சிமிர்னா சபையின் உபத்திரவத்தையும், கர்த்தர் அறிந்திருப்பதாகக் குறிப்பிட்டார். அவர் இன்றுள்ள சபையாரின் உபத்திரவங்களை அறிந்திருக்கிறார். ஒரு தனிப்பட்ட கிறிஸ்தவனுக்கும் சபைக்கும் எவ்வளவு பெரிய ஆறுதல்!

இ. மேலும் வசனம் 10ல், "நீ படப் போகும் பாடுகளைக் குறித்து எவ்வளவும் பயப்படாதே" என்று தைரியமும் நம்பிக்கையும் அளித்தார். ஏனெனில் அவரே மரணத்துக்கும் பாதாளத்துக்குமுரிய திறவுகோலை உடையவராயிருக்கிறார் என்றார். எனவே மரணமோ, தொடர்ந்து பாதாளத்தில் பங்கடைவதோ தம்மை மீறி நிகழப் போகிற காரியமல்ல; அந்த அதிகாரம் தம்மிடம் மட்டுமே உண்டு என்பதைத் தெளிவுபடுத்துகிறார். "சிறு மந்தையே, பயப்படாதே!" **(லூக். 12)**

## 2. நிறைகளும் குறைகளும்

அ. நிறைகள் : சிமிர்னா பட்டணத்து சபையார் கிறிஸ்துவில் கொண்டிருந்த விசுவாசத்தினிமித்தம் பிழிந்தெடுக்கும் பாடுகளை சகித்து கொண்டிருந்தனர். ஆலையிலிட்ட திராட்சைப்பழம் போல், கற்பாறையில் சிக்கிய ஒரு ஜீவன் போல் பலவித பாடுகளையும் அவர்கள் சகித்துக் கொண்டிருந்த நிலை. அவர்கள் ஆவிக்குரிய வகையில் மிகவும் ஐசுவரியமிக்கவர்களாயிருந்தும், மாம்சத்தில் தரித்திரமுள்ளவர்களாயும், யூதர்களல்லாதவர்களாயும் **(ரோமர் 2:29)**, தங்களை யூதர் என்று சொல்லி தூஷணம் செய்ததில் உண்டான அவமானங்களைச் சகித்துக் கொண்டிருந்ததையும் கிறிஸ்து அறிந்திருந்தார். ஏனெனில், கிறிஸ்து தாமே அப்படிப்பட்ட பாடுகளை அனுபவித்தமையால் அதன் உண்மை உணர்வை அவர் அறிந்திருந்தார் **(எபி. 4:14, 15)**.

இன்று நாம் சந்திக்கும் பிரச்னைகளை அன்று சிமிர்னா பட்டணத்து விசுவாசிகள் அனுபவித்திருக்கலாம். தங்கள் சொந்த ஜனத்தாரால் பகைத்து ஒதுக்கப்பட்டிருக்கலாம். வேலையிழந்து, குடும்பத்தின் அடிப்படைத் தேவைகளைக் கூட சந்திக்க இயலாமல் இருந்திருக்கலாம்; மனைவி, மக்கள் பசிக்கொடுமையால் வாடிவதங்கும் நிலைக்கு உள்ளாகியிருக்கலாம்; பொய்க் குற்றஞ் சாட்டப்பட்டு, சிறையுண்டு கொலை செய்யப்பட்டிருக்கலாம்; தங்கள் சொந்த ஊரிலேயே அந்நியர்கள் போல் நடத்தப்பட்டிருக்கலாம்; மத வெறியர்களின் காரணமற்ற காழ்ப்புணர்ச்சியால் பலியாக்கப்பட்டிருக்கலாம். ஆகிலும் கர்த்தர் அவர்களை ஆறுதல் படுத்தி, "நீ படப் போகிற பாடுகளைக் குறித்து எவ்வளவும் பயப்படாதே; இதோ சோதிக்கப்படும் பொருட்டாக பிசாசானவன் உங்களில் சிலரை காவலில் போடுவான்; பத்து நாள் உபத்திரவப்படுவீர்கள். ஆகிலும் நீ மரண பரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்" என்றார் **(வெளி 2:10)**

மேற் குறிப்பிட்ட பாடுகளில், உண்மையாய் விசுவாசத்தில் தரித்திருந்து வெற்றி கொள்கிறவன் இரண்டாம் மரணமாகிய நரகத்தில் அவன் சேதமடைவதில்லை **(வெளி 2:11)** நாம் வெற்றி கொள்வோமா?

– தொடரும்

"ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக் கடவன்"

போதகர் **E.A. ஆறுமுகம்**
திண்டுக்கல்

# ஞானஸ்நானத்தின் அவசியம்



பிரியமான வாலிப நண்பர்களே ! அனைவரையும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகிறேன். இம்முறை ஞானஸ்நானத்தை (திருமுழுக்கு) பற்றி அறிந்து கொள்வோம்.



Baptism என்ற ஆங்கில வார்த்தையானது "Baptixo' என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து தழுவி வந்த சொல்லாகும். அதற்கு ''நீரில் அமிழ்த்துதல்'' அல்லது ''முழுக்குதல்'' என்பது பொருளாகும்.

முதலாவது, ஞானஸ்நானத்தின் அவசியத்தை தெரிந்து கொள்ளலாம். ஒருவர் கிறிஸ்தவராக வாழ்க்கையை துவக்க அல்லது கிறிஸ்தவராக மாற, ஞானஸ்நானம் அவசியம். சில வேதாகம ஆதாரங்களோடு ஞானஸ்நானத்தின் அவசியத்தை பார்க்கலாம்,

1. பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறுவது அவசியம். **அப். 2:38** "பேதுரு அவர்களை நோக்கி : நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்.

2. இரட்சிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறுவது அவசியம் **1 பேதுரு 3:21** "அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது, மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல் தேவனைப்பற்றும் நல்மனச்சாட்சி இப்பொழுது நம்மையும் இயேசுகிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது"

3. புது ஜீவனுள்ளவர்களாய் பிறப்பதற்கு ஞானஸ்நானம் அவசியம் **ரோமர் 6:4** "மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும் படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம்.

4. கிறிஸ்துவை தரித்துக்கொள்ள ஞானஸ்நானம் அவசியம் **கலா 3:27** ஏனெனில் உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே". இதன் மூலம் நாம் கிறிஸ்துவுக்குள் வர ஒரு வாய்ப்பாகும்.

5. தேவனால் ஞானஸ்நானம் கட்டளையிடப்பட்டிருப்பதினால் அது அவசியமாயிருக்கிறது **அப். 10:47, 48** "அப்பொழுது பேதுரு: நம்மைப் போலப் பரிசுத்த ஆவியைப் பெற்ற இவர்களும் ஞானஸ்நானம் பெறாதபடிக்கு எவனாகிலும் தண்ணீரை விலக்கலாமா என்று சொல்லி, கர்த்தருடைய நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுக்கும்படி கட்டளையிட்டான். அப்பொழுது சிலநாள் அங்கே தங்கும்படி அவனை வேண்டிக்கொண்டார்கள்".

6. கிறிஸ்துவின் அதிகாரத்தை பெற்றதினால் ஞானஸ்நானம் அவசியம் **மத்:28:18–20** "அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி : வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென் .

எனவே எனக்கன்பான வாலிப நண்பர்களே ! ஞானஸ்நானத்தின் அவசியத்தை உணர்ந்து கொண்டு, அதை சரியான முறையில் புரிந்து கொண்ட நீங்கள் வசனத்தின்படியான ஞானஸ்நானம் பெறாமல் இருக்கலாமா?

**ஜோசப் பிரதீப்**

# ஞானஸ்நானத்தை தள்ளிப்போடாதே!



அன்பு குட்டிப் பிள்ளைகளே ! எப்படி இருக்கிறீர்கள்? நீங்கள் சந்தோஷமாக இருப்பீர்கள் என்று நான் கர்த்தருக்குள் விசுவாசிக்கிறேன். அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் 16ம் அதிகாரத்தில் ஒரு சம்பவம் சொல்லப்படுகிறது. அது என்ன தெரியுமா?

பவுலும், சீலாவும் கடவுளைப் பற்றி அநேகருக்கு சொல்லிக் கொண்டிருந்தார்கள், இயேசுவை நம்புங்கள்; அவர் நமது பாவத்திற்காக தான் இந்த பூமிக்கு வந்தார்; அவரை விசுவாசித்து மனந்திரும்பி, தேவகுமாரன் என்று அறிக்கை செய்து திருமுழுக்கில் கீழ்படிந்தால், நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள், என்று எல்லோருக்கும் சொல்லிக் கொண்டிருந்தார்கள். இதனால் என்ன நடந்தது என்று உங்களுக்கு தெரியுமா? "இயேசுவைப் பற்றி சொன்னதினால் இருவரையும் பிடித்து, பயங்கரமாக அடித்து, சிறையில் அடைத்து விட்டார்கள். மிகவும் கஷ்டம் தானே? அந்த நாள் இரவில், அதுவும் நடுராத்திரி இருக்கும்; அப்பொழுது அவர்கள் இருவரும் ஜெபம் செய்து, தேவனை துதித்து பாடல் பாடினார்கள், அப்பொழுது, திடீரென சிறை கட்டிடம் அசைய துவங்கின, சிறைச்சாலை கதவுகள் எல்லாம் தானாக திறந்தது.



இந்த பயங்கர சத்தம் கேட்டு வந்த சிறைச்சாலை அதிகாரி எல்லா கைதிகளும் தப்பிவிட்டார்கள் என முடிவுசெய்து, இதனால் தனக்கு தண்டனைக் கிடைக்கும் என எண்ணி, தன்னை தான் மாய்த்துக்கொள்ள முயன்றான். உடனே பவுல், உன்னை நீயே அழித்துக்கொள்ள வேண்டாம். நாங்கள் இங்குதான் இருக்கிறோம் யாரும் தப்பி ஓடவில்லை என்று சொன்னார். உடனே அவன் தீபங்களை கொண்டுவர சொல்லி உள்ளே ஓடி நடுங்கி, பவுலுக்கும் சீலாவுக்கும் முன்பாக விழுந்து அவர்களை

வெளியே அழைத்து வந்து, ஆண்டவரே, இரட்சிக்கப்பட நான் என்ன செய்ய வேண்டும் என்றான். அதற்கு அவர்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி அப்பொழுது நீயும் உன் விட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் என்று சொல்லி அவனுக்கும் அவன் வீட்டிலிருக்கிற அனைவருக்கும் கர்த்தருடைய வசனத்தை போதித்தார்கள், அது மாத்திரம் அல்ல, இராத்திரியில் அந்த நேரத்தில் சிறையதிகாரியும் அவனுடைய வீட்டார் அனைவரும் உடனே ஞானஸ்நானம் எடுத்தார்கள்.

பிள்ளைகளே, நீங்கள் கவனித்தீர்களா? நடுராத்திரியில் ஒரு குடும்பமே ஞானஸ்நானம் எடுத்தார்கள் என்றால், பாவமன்னிப்பு பெற ஞானஸ்நானம் பெறுவதை தள்ளிப்போடக்கூடாது என்று தானே அர்த்தம். ஏனெனில், மனிதன் வாலிப வயதை, அதாவது நன்மை தீமை அறியும் வயதை அடைந்த பின்பு, பாவம் செய்கிறான். அந்த பாவம் அவனை தேவனைவிட்டு பிரித்துவிடுகிறது. ஆகையால் உடனே பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறுவது முக்கியம். உங்கள் வீட்டில் யாராவது வசனத்திற்கு கீழ்படியவில்லை என்றால், உடனே அவர்களை ஞானஸ்நானம் எடுக்கும்படி ஊக்கப்படுத்துங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்.

**மனன வசனம் : மாற்கு 16:16** "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்'.

**– அன்பு ஏசுதாஸ்.சா**

பாடம் 2

# தண்ணீர் ஞானஸ்நானம்



ஹாய் குட்டீஸ் ! இயேசு ஆண்டவரின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். ஞானஸ்நானம் என்ற வார்த்தையை கேள்விப்பட்டிருப்பீர்கள். அதில் தேவையான ஒரு விஷயத்தை தெரிந்து கொள்வோம்.

எத்தியோப்பியா என்ற தேசத்து மந்திரி எருசலேமிற்கு பணிந்து கொள்ளும்படி வந்து தன் நாட்டிற்கு திரும்பி போனார். அப்பொழுது அவனுடன் போய் இரதத்திலே சேர்ந்து கொள் என்று ஆவியானவர் பிலிப்பு என்று பேர்கொண்ட, இயேசுவின் சுவிசேஷத்தை அறிவித்துக் கொண்டுவந்த ஒரு சீஷனை அனுப்பினார். அவன் போய் சேர்ந்த பொழுது, அவர் ஏசாயா தீர்க்கதரிசன புஸ்தகத்தில், இயேசுவின் சிலுவை பாடுகள் பற்றி வாசித்து கொண்டிருந்தார். அந்த பகுதியின் அர்த்தம் மந்திரிக்கு தெரியாததினாலே, அந்த வார்த்தைகளை முன்னிட்டு இயேசுவை குறித்து அவருக்கு பிரசங்கித்தான். அவர்கள் பேசிக்கொண்டே போகையில் பிலிப்பு தண்ணீருள்ள ஓர் இடம் வந்தது. மந்திரி அதை பார்த்தவுடன், “இதோ தண்ணீர் இருக்கிறதே! நான் ஞானஸ்நானம் பெற தடையென்ன?” என்றார்.



ஆகையால், இருவரும் தண்ணீரில் இறங்கானார்கள். பிலிப்பு அவருக்கு ஞானஸ்நானம் கொடுத்தான்.

குட்டீஸ் கவனித்தீர்களா ? அந்த மந்திரி எவ்வளவு பெரியவர் அவர் நினைத்திருந்தால் தன் வேலையாட்களை கொண்டு தண்ணீரை மொண்டுவரச்சொல்லி தெளித்தோ ஊற்றியோ ஞானஸ்நானம் பெற்றிருக்கலாம். ஆனால் அவன் அப்படி செய்யவில்லை. மேலும், ஞானஸ்நானம் பெறுகிற நபரும் ( மந்திரி ) கொடுக்கிற நபரும் (பிலிப்பு) ஆகிய இருவருமே தண்ணீரில் இறங்கி இருக்கிறார்கள். அப்படியானால் இருவர் இறங்கும் அளவிற்கு நிறைய தண்ணீர் அங்கே இருந்திருக்கிறது. அதினால், ஞானஸ்நானத்திற்கு மிகவும் தேவையான ஒரு விஷயம் என்னவென்றால், அங்கே நிறைய தண்ணீர் இருக்கவேண்டும்.

## சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்

1. R. கெவின் கேப்ரியல் – மதுரை
2. J. ரிச்சர்ட் ஞானசீலன் – திருச்சி
3. ப. சுசித்ரா – சேலம்
4. R. ரோவினா – V.K. புரம்
5. V.K. எல்ஸ்டன் – V.K. புரம்
6. A. கெனித்சாம் – மதுரை

## சென்ற மாதம் பெயர் விடுபட்டவகள்

1. Mrs. ரூபாவதி நோபிள் – திருநெல்வேலி
2. Mrs. டெய்ஸி தர்மராஜ் – புதுக்கோட்டை

## சிறுவர்க்கான கேள்விகள்

1. பவுலையும், சீலாவையும் ஏன் சிறையில் போட்டனர் ?
2. பவுலும் சீலாவும் யாருக்கு வசனத்தை போதித்தார்கள் ?
3. நடுராத்திரியில் சிறைச்சாலை அதிகாரி என்ன பெற்றார் ?
4. எத்தியோப்பிய மந்திரிக்கு வசனத்தை போதித்தது யார் ?
5. தண்ணீருள்ள இடம் வந்தவுடனே மந்திரி என்ன கேட்டார் ?
6. தண்ணீரில் இறங்கிய இருவர் யார் ? ஏன் இறங்கினார்கள் ?

பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 5-11-2016

# அக்டோபர் மாத கேள்விகள்

1. விசுவாசமுள்ளவனாகி எதை பெற்றவன் இரட்சிக்கப்படுவான் என இயேசு சொன்னார்?
2. பாவமன்னிப்பிற்கென்று என்ன பெறும்படி பேதுரு கூறினார்?
3. 'சகல ஜாதிகளையும் சீஷராக்கி' என்ன கொடுக்க சொல்லி இயேசு கட்டளையிட்டார்?
4. இயேசு ஏன் ஞானஸ்நானம் பெற்றார்?
5. பரிசுத்த ஆவியினாலும், அக்கினியினாலும் ஞானஸ்நானம் கொடுப்பார் என யோவான் யாரை சொன்னார்?
6. மரணபரியந்தம் உண்மையாயிருப்பவர்களுக்கு என்ன தரப்படும்?
7. ஞானஸ்நானத்திலே யாருடனே அடக்கம் பண்ணப்பட்டோம் என பவுல் கூறுகிறார்?
8. 'ஞானஸ்நானம் பெற்று உன் பாவங்கள் போக கழுவபட்டு' யார் யாரிடம் சொன்னது?
9. 'ஒரே ஞானஸ்நானம்' என வாசிப்ப தெங்கே?
10. யோவான் எதற்கென்று ஞானஸ்நானம் கொடுத்ததாக இயேசு சொன்னார்?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 5-11-2016**

அனுப்ப வேண்டிய முகவரி : **சகோதரி. பேபி ராஜா**
45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,
அரசரடி, மதுரை - 625 016
செல்: 92 4421 4421, 92 4431 4431

## செப்டம்பர் மாத பதில்கள்

| | | |
|---|---|---|
| 1. எபி 1:14 | 2. வெளி 19:10; 22:8 | 3. கொலே 2:19 |
| 4. மத் 25:41 | 5. I கொரி 1:21 | 6. II பேதுரு 2:4 |
| 7. சங் 34:7 | 8. சங் 91:11, 12 | 9. மத் 25:31 |
| 10. லூக்கா 15:10 | | |

## செப்டம்பர் மாத கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்

1. Sis. S. லில்லி புஸ்பம் – தூத்துக்குடி
2. G. பீற்றர் பால்ராஜ் – ஆறுமுகநேரி
3. Mrs. தெபோராள் ஸ்டீபன் – சேலம்
4. Mrs. பிரேமலதா சுந்தர்பாபு – செங்கல்பட்டு
5. Mrs. ஒலிவ் தேவதாஸ் – சென்னை
6. D. மோசஸ் – தஞ்சாவூர்
7. G. அந்தோனிதாஸ் – பரமக்குடி
8. Mrs. டெய்ஸி தர்மராஜ் – புதுக்கோட்டை
9. Mrs. ஜெயமணி ஜெயபாண்டியன் – கடலூர்
10. Mrs. காந்தா மனோகரன் – திருச்சி
11. சாந்தி வில்லியம் – புதுக்கோட்டை
12. Mrs. ரூபி ஜெயராஜ் – மதுரை
13. Mrs. மேரி ராஜ் – மதுரை
14. B. ஜாய்ஸ் ஜோசுவா – வெள்ளறம்
15. Mrs. ரூபாவதி நோபிள் – திருநெல்வேலி
16. Mrs. D.I. அன்புசுதந்திரம் – ஏர்வாடி
17. R. ஞானசிரோன்மணி – சமயநல்லூர்
18. Mrs. சுகந்தி ஜோன்ஸ் – திருச்சி
19. S. டேவிட் சாந்தகுமார் – வல்லம்
20. சாந்தி ஜோயல் – திருச்சி
21. C. பூபதி லாரன்ஸ் – கோவை
22. Mrs. ஹெலன் திலக் – மதுரை
23. Mrs. T. புளோரா எழில் – ஆம்பூர்
24. S. அசோக்குமார் பிரின்ஸ் – தூத்துக்குடி
25. Mrs. ஹெப்ஸி தாமஸ் – படப்பை
26. J. ரேச்சல் தமிழரசி – மதுரை
27. Mrs. A. சந்திரா – மதுரை
28. Mrs. புளோரா சுந்தர் – மதுரை
29. Mrs. பியூலா ஜேசுராஜன் – புதுச்சேரி
30. Mrs. ஜெபசீலி ஜெயக்கொடி – திருச்சி
31. J. ஜான்சி – ஆனைமலை
32. Mrs. லில்லி ஆல்பர்ட் – நெல்லை
33. Mrs. ஷீலா ரிச்சர்ட்தாஸ் – சென்னை
34. S. சூசை மரியான் – சென்னை
35. J. விஜய் – வளர் நகர்
36. ச. பன்னீர் செல்வம் – சேலம்
37. Mrs. பங்கஜம் ஜேம்ஸ் – வளர் நகர்
38. G. ஏஞ்சலம்மாள் – வளர் நகர்
39. R. சரோஜா – தென்கலம்
40. Mrs. தெல்மா ஸ்டான்லி – மதுரை
41. K. மோகன் – குமாரபாளையம்
42. Mr. ஆனந்த கதிரோன் – சென்னை
43. J. செல்வி ஜெயராஜ் – நாமக்கல்
44. S. ஜெயராஜ் – கோவை
45. Dr.D.S. ஜெபநேசன் – திண்டுக்கல்
46. Mrs. கிளாடிஸ் ராஜையா – V.K. புரம்
47. M. ரவிக்குமார் – குன்னூர்
48. R. ஷீலா ரவிக்குமார் – குன்னூர்
49. R. அனிதா மார்கிரேட் – குன்னூர்
50. Mrs. சந்திரா பீட்டர் – திருச்சி
51. Mrs. S. செல்வி ஜான்ரோஸ் – நாகர்கோவில்
52. Mrs. மெர்சி சுதா – கோவை
53. A. ரோஸ் மேரி – சென்னை
54. Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் – சேலம்
55. M.S. ஜேம்ஸ் – திண்டுக்கல்
56. P. சூரிய பிரியா – திருமங்கலம்
57. P. இந்திரா பாண்டி – திருமங்கலம்
58. S. கேத்ரின் அருள்நேசம் – மதுரை
59. கிறிஸ்டி ஜோசப் – திருவள்ளூர்
60. R. நாகலிங்கம் சித்ரா – திருச்சி

தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !

Owned, Published & Edited by P.C. PHILEMON RAJAH
Printed at Thee Classic Printers Madurai-1 Phone 2323819
Registered News Paper No. : TNTAM/2011/42166
Postal Registration No. : TN/MA/67/2015-2017
Posted at Arasaradi HPO on 10th, 11th October 2016


## கிருபையுள்ள வார்த்தை வெளியிட்டுள்ள சிறப்பு புத்தகங்கள்








அன்பார்ந்த வாசகர்களே! இந்த அனைத்து புத்தகங்களையும் உங்கள் ஆத்மீக வளர்ச்சிக்கு பயன்படுத்திக்கொள்ளும்படி வேண்டுகிறோம். ரூபாய் 100/-மட்டும் அனுப்பி இப்புத்தக தொகுப்பை பெற்றுக்கொள்ளுங்கள்!

---

## தபால் வழி பைபிள் பாடங்கள்





அடிப்படை (Basic) மற்றும் முதுநிலை (Advanced)
பைபிள் பாடங்களை தபால் வழியில் படித்து,
அழகிய சான்றிதழும் (Certificate)
முழு பைபிளையும் பரிசாக பெறுங்கள்!

## கைபிரதிகள்






உங்கள் சுவிஷேச ஊழியத்திற்கு
கைபிரதிகள் பல்வேறு தலைப்புகளில்
பாதி விலையில் கிடைக்கும்.
விபரங்களுக்கு

**92 4421 4421, 92 4431 4431**


If undelivered please return to :

EDITOR
KIRUBAIYULLA VAARTHAI

45 C/1, Church Lane,
Coronation Street, Arasaradi,
Madurai - 625 016. India
E-mail : obey2jesus@gmail.com
Cell : 92 4421 4421, 92 4431 4431

To




ஜெபத்திலே



